வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.221/20

வழக்கு சாட்சி - அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெற்றிசெல்வன் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.06.23

( எதிரி ஆஜர்.)

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஜவஹர்லால் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். பார்வைமகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 30.5.20 அன்று காலை சுமார் 7 லிருந்து 8 மணிக்குள் முருகன் வீட்டருகே அதற்கு முன்னதாக நடந்த சண்டை சம்மந்தமாக போலிசார் பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக நான் கையெழுத்து செய்தேன். பார்வைமகஜர் அசாஆ. 2.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அசா1 முருகன் எனக்கு உறவுமுறையில் அண்ணன் வேண்டும். எனது வீடு எங்கு உள்ளது என்றால் சம்பவ நடந்த இடத்திலிருந்து 6, 7 வீடு தள்ளி அமைந்துள்ளது. என்னிடம் போலிசார் முருகன் வீட்டிற்கு அருகில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள். கையெழுதது போடும் போது எத்தனைமணிஇருக்கும் என்றால் அது எனக்கு தெரியாது. போலிசார் வரும் போது எத்தனை நபர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் நிறைய நபர்கள் இருந்தார்கள். முருகன் வீட்டிற்கு அருகில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 20 வீடுகள் உள்ளது. முருகன் வீட்டிற்கு முன்பு கோவில் உள்ளதா என்றால் உள்ளது. பார்வைமகஜரில் என்ன எழுதியிருந்தார்கள் என்றால் வரைபடம் வரைந்திருந்தார்கள். சம்பவத்தை பார்த்தாக கையெழுத்து போடசொன்னார்கள். என்ன எழுதியிருந்தது என்பதை நான் படித்த பார்க்கவில்லை. அன்றையதினம் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் அசா1 எனக்கு அண்ணன் முறை என்பதால் அவர் சொ்லலிக்கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை தவிர வேறு யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் நான் மட்டும் தான் போட்டேன். அதற்கு பிறகு யார் கையெழுத்து போட்டார்கள் என்று தெரியாது. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.